## கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

### முதலாம் வருட பொதுக்கலைமாணித் தேர்வு - 2007/2008 (வெளிவாரி)
### (மே/யூன் 2011)

LIBRARY
29 JUN 2011
Eastern University, Sri

## CC 105 இலங்கை பற்றிய கற்கைகள்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

எவையேனும் ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

01. இலங்கையில் அண்மைக்காலங்களில் இடம் பெற்றுவரும் வெள்ள அனர்த்தங்கள் பற்றி விளக்குவதுடன் அதனால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைக்க முன்னெடுக்கக்கூடிய நடவடிக்கைகள் பற்றியும் ஆராய்க.
(20 புள்ளிகள்)

02. இலங்கையின் வறண்ட வலய அபிவிருத்தியில் மகாவலி அபிவிருத்தித் திட்டத்தின் வெற்றி, தோல்விகளைப் பரிசீலிக்குக.
(20 புள்ளிகள்)

03. பண்பாட்டின் வெளிப்பாடாக அளிக்கைக் கலைகள் எவ்வாறு பங்களிப்புச் செய்கின்றன என்பதனை ஆராய்க.
(20 புள்ளிகள்)

04. இலங்கையில் தேசிய ஒருமைப்பாட்டிற்குத் தடையாகவுள்ள காரணிகளை எடுத்துக் காட்டி தேசிய ஒருமைப்பாட்டினைக் கட்டியெழுப்ப முன்வைக்கக் கூடிய உமது ஆலோசனைகளைத் தருக.
(20 புள்ளிகள்)

05. அண்மைக்காலங்களில் இலங்கையின் பெருந்தோட்ட விவசாயத்தில் எதிர்நோக்கும் சவால்களை ஆராய்க.
(20 புள்ளிகள்)

06. 'பணவீக்கம்' என்பதனால் கருதப்படுவது யாது?
யுத்தத்தின் பின்னரான இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியில் பணவீக்கம் எத்தகைய தாக்கத்தினைச் செலுத்துகின்றது என்பதனை ஆராய்க.
(20 புள்ளிகள்)

07. இலங்கையின் இனமுரண்பாட்டுத் தீர்வுக்கு பல்வேறு நாடுகள் மேற்கொண்ட முயற்சிகளை சுருக்கமாகக் குறிப்பிட்டு அவை வெற்றியளிக்காமல் போதனற்கான காரணங்களை பரிசீலிக்குக.
(20 புள்ளிகள்)

08. பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டினுக்கு விளக்கக் குறிப்புரை எழுதுக.
(அ) இலங்கையில்சமூக மாற்றத்தில் வர்க்கமும், சாதியும்
(ஆ) இலங்கையில் நகரமயமாக்கம்
(இ) இலங்கையில் வேலையின்மையும், வறுமையும்
(10 x 2 = 20 புள்ளிகள்)

*********